Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 152 | புதன்கிழமை 27 ஏப்ரல் 2022 | சித்திரை 14 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 40

## ஜெட் வேகத்தில் சிலிண்டர் விலை!

கொழும்பு. ஏப்.27

லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 2 ஆயிரத்து 185 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு. புதிய விலை 4 ஆயிரத்து 860 ரூபா 15

# பதவி இழுபறியால் வலுக்கும் நெருக்கடி

**வழிவிடுவதற்கு ராஜபக்சக்கள் மறுப்பு**

**பதவிகளைத் தக்க வைக்க அதிரடிக்காய்நகர்த்தல்கள்**

**தொடர்கிறது வரிசைகளில் காத்திருக்கும் அவலம்**

கொழும்பு, ஏப்ரல் 27

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், அமைச்சரவையும் பதவி விலக வேண்டுமென்று நாடு முழுவதும் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில், தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக்கொள்ள கோத்தாபய ராஜபக்சவும், மஹிந்த ராஜபக்சவும் கடும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர். இந்த நிலைமையால் நாட்டின் அரசியல் நெருக்கடியும், பொருளாதார நெருக்கடியும் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகின்றது. 15



## கண்டியில் இருந்து மாபெரும் பேரணி!

கொழும்பு, ஏப்.27

அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய சக்தி பாத யாத்திரை நேற்றுக் கண்டியில் இருந்து ஆரம்பமானது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் இந்தப் பாத யாத்திரைப் போராட்டத்தில் ஐக்கிய 15



## மின் கட்டணங்களும் நூறு வீதம் உயரலாம்

கொழும்பு, ஏப்.27

இலங்கை மின்சார சபை நூறு வீதத்தால் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான வேண்டு 15

## பெரும்பான்மை இருந்தால் ஆட்சி மாற்றத்துக்கு தயார்

### ஜனாதிபதியும் பச்சைக்கொடி என்கிறார் கொடஹேவா

கொழும்பு, ஏப்.27

நாடாளுமன்றத்தில் இணக்கப்பாடு இருந்தால், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி தயாராகவே இருக்கின்றார். எதிரணியினர் சாதாரண பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சியைப் பொறுப்பேற்கலாம் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நாலக கொடஹேவா தெரிவித்தார். 15

## அலரி மாளிகை முன் "மைனா கோ கம"

கொழும்பு, ஏப்.27

கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்பாக "மைனா கோ கம" என்ற பெயரில் போராட்டம் ஒன்று முன் 15

## நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நடுநிலைமை வகிப்பதே சரியானது

### விக்னேஸ்வரன் எம்.பி. விளக்கம்

கொழும்பு, ஏப்.27

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள்நடுநிலைமை வகிக்கவேண்டும் என்பதே எனது 15



## நிதியும், நீதியும் சப்ரியின் வசம்!

கொழும்பு, ஏப்.27

நிதி அமைச்சர் அலி சப்ரி நேற்றுமாலை நீதி அமைச்சராகவும் ஜனாதிபதி முன்னிலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தற்போதைய அரசின் முன்னைய அமைச்சரவையில் அலி 15

## திடீர் சுகவீனமுற்றவர் சிகிச்சை பயனின்றிச் சாவு!

யாழ்ப்பாணம், ஏப்.27

திடீர் சுகவீனமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். 15

## இயக்கச்சி விபத்தில் பெண் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.27

பளை, இயக்கச்சியில் நேற்று நடந்த விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தாளையடி, உடுத்துறை வடக்கைச் சேர்ந்த ஞானசீலன் தவமலர் 15



# பலமிழக்கவில்லை!

## கம்மன்பிலவின் கருத்துப் பொய் என்று பிரதமர் அலுவலகம் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 27**

**பிரதமர் மஹிந்த ராஜபக்ச இன்னும் பெரும்பான்மை பலத்தை இழக்கவில்லை. அவர் பதவியில் இருந்து விலகப்போவதாக எந்தவொரு குழுவுக்கும் அறிவிக்கவில்லை என்று பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 120 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிப்பர் என்று உதய கம்மன்பில வெளியிட்டுள்ள கருத்துக்குப் பதிலளித்துள்ள பிரதமர் அலுவலக சிரேஷ்ட அதிகாரிகள் மேலும் தெரிவிக்கையில்;

பொதுஜனபெரமுனஉறுப்பினர்கள், சுயேச்சை உறுப்பினர்கள் மற்றும் மத குழுக்களுடன் பிரதமர் நல்லுறவைப் பேணுகின்றார். 100க்கும் அதிகமான ஆசனங்களை சபையில் பலமாக வைத்துள்ளார்.

அவர் தனது பதவி விலகல் தொடர்பில் எவருடனும் கலந்துரையாடியிருக்கவில்லை. பிரதமரின் அதிகாரங்களை அநாவசியமாகப் பயன்படுத்தும் சில குழுக்கள் அவரை பதவி விலக விடாமல் தடுப்பதாகவும், அந்த நபர்களின் பெயர்களை தான் வெளியிடுவேன் எனவும் கம்மன்பில தெரிவித்த கருத்துப் பொய்யானது.

இது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவறாக வழிநடத்த கம்மன்பில மேற்கொண்ட முயற்சி -என்றனர். (க-இ)

# அபிவிருத்தித் திட்டங்களின் வெளிநாட்டு நிதி நிறுத்தம்

கொழும்பு, ஏப். 27

இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கிய நிதியுதவியை நிறுத்த, வெளிநாட்டு அமைப்புக்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல், சமூக உறுதியற்ற நிலைமையைக் காரணமாகக் கொண்டு இந்த அமைப்புக்கள் நிதி வழங்குவதை நிறுத்தவுள்ளன. இதன் காரணமாக நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-இ)

# அரசமைப்பின் பிரகாரமே நெருக்கடிகளுக்குத் தீர்வு


## குணவங்ச தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 27

அரசமைப்பின் பிரகாரமே நாட்டின் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணமுடியும் என்று நாட்டைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள விசேட கடிதமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமானால், இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும். அரசியல் தலைவர்கள் கட்சி பேதங்கள் இன்றி மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (க-இ)



# ரம்புக்கனை விவகாரம்: விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 27

ரம்புக்கனையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பிலான விசாரணைகள், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பிலான அறிக்கை, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்த உத்தரவிட்டது யார் என்பதை துல்லியமாகக் கண்டறிவதற்காக, சம்பவத் தினத்தன்று கடமையிலிருந்த கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் ரம்புக்கனை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரிடம் விசாரணைகளை முன்னெடுக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (க-இ)

# நாணயக் கொள்கையை கடுமையாக்கப் பணிப்பு

கொழும்பு, ஏப். 27

இலங்கை நாணயக் கொள்கையை கடுமையாக்குவதுடன், வரிகளையும் உயர்த்துமாறு சர்வதேச நாணய நிதியம் ஆலோசனை வழங்கியுள்ளது.

இலங்கை நெகிழ்வான மாற்று விகிதங்களைப் பின்பற்ற வேண்டும். முக்கியமான செலவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வரி வருவாயை அதிகரிக்க வேண்டும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பணவியல் கொள்கை கடுமையாக்கப்பட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆசியபசுபிக் செயற்பாட்டுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-இ)




ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கெதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவாக, பதுளை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினர் பதுளையில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். (க-இ)

# அரசைக் கவிழ்க்கும் வரை எதிர்க்கட்சி ஓயாது

## ஹரின் பெர்னாண்டோ எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 27

பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று, அரசாங்கம் தீர்வு வழங்க காலம் தாழ்த்தினால், தற்போதைய அரசாங்கம் கவிழ்வது நிச்சயம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடு முழுவதும் பல்வேறு தரப்பினர் தற்போது அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு எதிர்க்கட்சிகளும் ஆதரவு தெரிவிக்கும். எதிர்வரும் மேமாதம் முதலாம் திகதி பெரும் பேரணியை நடத்தவுள்ளோம். எதிர்க்கட்சிகளின் பலத்தை வெளிக்காட்டும் வகையில் இந்த எதிர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்படும். தற்போதைய அரசாங்கம் கவிழ்க்கப்படும் வரை எதிர்க்கட்சிகள் ஓயாது -என்றார். (க-இ)



அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த ஐக்கிய சக்தி பாத யாத்திரை கண்டியில் நேற்று ஆரம்பமாகியது. (ய)

# வாரத்தில் 7 நாள்களும் ஊடகவியலாளர் மாநாடு

கொழும்பு, ஏப்.27

வாரத்தில் 7 நாள்களும் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி, மக்களுக்குத் தகவல்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்களில் போலியான தகவல்கள் பரவுவதைத் தடுக்கும் வகையில் அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### இலங்கையின்

# பொருளாதார வளர்ச்சி 2.6 வீதமாகக் குறைவு

## *சர்வதேச நாணய நிதியம் அறிக்கை*

**கொழும்பு, ஏப். 27**

**இலங்கையின் 2022ஆம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 2.6 வீதமாகக் குறைந்துள்ளது என்று சர்வதேச நாணயநிதியத்தால் வெளியிடப்பட்டுள்ள உலக பொருளாதார அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3.6 வீதமாக இருந்தது. இந்த ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 2.6 வீதமாகக் குறைந்துள்ளது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2023ஆம் ஆண்டில் 2.7 வீதமாகவும், 2029ஆம் ஆண்டில் 2.9 வீதமாகவும் இருக்கும்.

ஒமிக்ரோன் பிறழ்வின் தாக்கத்துக்குப் பின்னர், இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இருந்து உலகளாவிய மீட்பு வலுவடையும். எனினும் உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு மற்றும் விரோதங்களை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுப்பதை நோக்கமாகக் கொண்ட பொருளாதாரத் தடைகள் காரணமாக, பொருளாதார வளர்ச்சி இன்னும் மோசமடைந்துள்ளது. அதற்கமைவாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உலகளாவிய வளர்ச்சி 3.6 வீதமாகக் கணிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (க-இ)

---

### *உலக சந்தையில்*

# தங்கம் விலை திடீர் வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 27

உலக சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

அதற்கமைய, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை ஆயிரத்து 927 டொலர் மற்றும் 25 சென்டாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 84 ஆயிரத்து 650 ரூபாவாகவும் 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 300 ரூபாவாகவும் 21 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 300 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (ம-ய)

---

# மருந்துகள் கொள்வனவுக்கு இத்தாலி அவசர நிதியுதவி



கொழும்பு, ஏப். 27

இலங்கைக்கு மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக, ஒரு தொகை நிதியை அவசர உதவியாக வழங்க இத்தாலி முன்வந்துள்ளது.

அதற்கமைவாக 125 மில்லியன் ரூபா வழங்கப்படும் என்று கொழும்பிலுள்ள இத்தாலியத் தூதரகம் தெரிவித்துள்ளது. உலக சுகாதார அமைப்பின், இத்தாலிய அவசர நிதியம் மூலம், இந்த நிதி இலங்கைக்கு வழங்கப்படும். விநியோக வலைப்பின்னல் முகாமைத்துவ செயல்முறையின் கீழ், சுகாதார அமைச்சால் பெறுகை நடைமுறைக்கு ஏற்ப, வெளிநாடுகளில் உள்ள விநியோகப் பிரிவின் ஊடாக நேரடியாகப் பணம் செலுத்த அனுமதிக்கப்படும் என்று கொழும்பிலுள்ள இத்தாலிய தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

---

# முட்டையின் விலை 50 ரூபாவை எட்டும்



கொழும்பு, ஏப். 27

முட்டை ஒன்றின் விலை 50 ரூபாவை விட அதிகரிக்கலாம் என்று இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கோழி உணவுக்குத் தேவையான இரசாயனங்களில் வெறும் 3 இராசயனங்களே உள்நாட்டில் உள்ளன. ஏனைய 11 இராசாயனங்களும் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீடுகளில் முட்டை ஒன்றை உற்பத்தி செய்வதற்காக 26 ரூபா செலவிடப்படுகின்றது. கிராம உற்பத்தியாளர்கள் முட்டை ஒன்றுக்காக 31 ரூபாவைச் செலவிடுகின்றனர். எனினும் 20 - 21 ரூபாவுக்கே உற்பத்தியாளர்களிடம் முட்டை கொள்வனவு செய்யப்படுகின்றது. இதனால் முட்டை உற்பத்தியை பல உற்பத்தியாளர்கள் கைவிட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

---

# பெற்றோல், டீசலுடன் மற்றொரு கப்பல் வரும்

கொழும்பு, ஏப். 27

டீசல் மற்றும் பெற்றோல் ஏற்றிய மேலுமொரு கப்பல் இந்த வாரம் நாட்டை வந்தடையும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

டீசல், சுப்பர் டீசல், ஒக்ரேன் 92 மற்றும் 95 வகையான பெற்றோல் மற்றும் மசகு எண்ணெய் என்பன போதுமான அளவு இலங்கைக்குக் கிடைக்கவுள்ளது. போதிய அளவு எரிபொருள்கள் கிடைத்தவுடன், பல மாதங்களாக நீடித்து வந்த எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான வரிசை முடிவுக்கு வரும் என்றும் அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அதேவேளை 24 மணித்தியாலமும் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் வகையில், செயற்பாட்டு மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---




**இப்ப இஸ்லாமியர்களின்ர நோன்புக்காலம்.** பகல் முழுக்க அன்னம், தண்ணியில்லாம விரதம் இருந்து பின்னேரம் சூரியன் மறைஞ்ச பிறகுதான் வாயில பேரீச்சையும், தண்ணியும் வைச்சு நோன்பை ஒவ்வொருநாளும் முடிப்பினம். அப்பிடி நோன்பு திறக்கிற நேரத்தில தங்களுக்கு பிடிச்சவையை கூப்பிட்டு - இப்தார் - நிகழ்வு செய்வினம். அப்பிடி ஒரு இப்தார் நிகழ்வு முந்தநாள் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு தனியார் விடுதியில நடந்தது. முஸ்லிம் அரசியல்வாதி ஒராள் நடத்திற அமைப்பின்ர ஏற்பாட்டில நடந்த இந்த இப்தார் நிகழ்வுக்கு வடக்கு மாகாண ஆளுநரை விருந்தினராகக் கூப்பிட்டிருந்திச்சினம். அதோட நல்லிணக்க எண்ணத்தைக் காட்டுறமாதிரி மற்ற மதங்களைச் சேர்ந்த மதகுருமாரையும் அழைச்சிருந்திச்சினம். அப்பிடி எல்லாருக்கும் சம இடம் குடுத்து, நல்லிணக்கத்தை வளர்க்க இப்பிடியான இப்தார் போன்ற நிகழ்ச்சிகள் கட்டாயம் தேவை.

ஆனால் என்ன நோக்கத்துக்காக உந்த இப்தார் ஒழுங்கு செய்யப்பட்டதோ அதைக் குழப்பிற மாதிரி ஒராள் நடந்து கொண்டதுதான் பெரும் சர்ச்சையாகிட்டுது. நிகழ்வில கலந்து கொண்ட முஸ்லிம்கள் உள்ளிட்ட எல்லாரும் தமிழ்தான் கதைக்கிறவை. அதுதானே அவையின்ர தாய்மொழியும். ஒரேயொரு ஆள் மட்டும் சிங்களத்தை தாய்மொழியாக் கொண்டவர். அவர் ஆரியகுளம் விகாராதிபதி. எண்டாலும் அவருக்கு தமிழ் விளங்கும். சில இடங்களில அவர் தமிழிலயே கதைச்சும் இருக்கிறார். ஆனால் அண்டையான் இப்தார் விழாவில ஆளுநரை உரையாற்றக் கூப்பிட, தமிழைத் தாய்மொழியாக் கொண்ட ஆளுநர் சிங்களத்தில கதைக்கத் தொடங்கிட்டார். அதை இன்னொரு ஆள் தமிழில மொழிபெயர்ப்பு வேற செய்தார்.

இந்தக் கூத்தை என்னெண்டு சொல்லுறது? ஏதும் சிங்கள ஏரியாவில, சிங்களச் சனங்கள் இப்பிடியான நிகழ்வைச் செய்யேக்க, ஆளுநர் சிங்களத்தில பேசியிருந்தால் அதில ஒருத்தரும் பிழை சொல்லாயினம். ஆனால் அந்த நிகழ்வில இருந்த பிக்கு உள்ளிட்ட எல்லாருக்கும் தமிழ் நல்லா விளங்கும் எண்ட நிலையில ஏன் ஆளுநர் சிங்களத்தில உரையாற்ற வேணும்? எண்டு அங்க வந்த எல்லாரும் புறுபுறுக்கத் தொடங்கிட்டினம். ஒருவேளை ஆளுநருக்கு தமிழ்ல சரளமாப் பேச வராட்டி, எல்லாருக்கும் பொதுவா இங்கிலிஷில பேசியிருந்தாலாவது அங்க போனவைக்கு கொஞ்சம் மனம் நிம்மதிப்பட்டிருக்கும். ஆனால் ஆளே இல்லாத கடையில ரீ ஊத்தினமாதிரி, சிங்கள ஆக்களே இல்லாத இடத்தில (பிக்கு மட்டும் விதிவிலக்கு) எதுக்கு இப்பிடிச் சிங்களத்தில பேச வேணும்? உலக அளவில தமிழுக்கு பேர் போன யாழ்ப்பாணத்தில, தமிழ் ஆக்கள் இருக்கிற ஒரு சபையில, தமிழைத் தாய்மொழியாக் கொண்ட ஒரு ஆளுநர் சிங்களத்தில பேசுறதும், அதை அவரின்ர எடுபிடி மொழிபெயர்க்கிறதும் அபத்தத்திலும் அபத்தமெல்லோ. ஒஸ்கார் மேடையிலகூட ஏ.ஆர்.ரஹ்மான் தமிழ்ல கதைக்கேக்க, இஞ்ச இப்பிடியெல்லாம் கூத்து நடக்குது. தனக்கெடாச் சிங்களம் பிடரிக்குச் சேதம். ஆளுநருக்கு இன்னும் அது விளங்கேலை போல. சிங்களத்தில பேசுறதை ஒருவேளை கௌரவமா நினைக்கிறாரோ?



\- பட்சி



## காட்டுப்புலம் அ.த.க.பாடசாலையின்

# அதிபரை இடமாற்ற வேண்டாமென பொதுமக்கள் நேற்றுப் போராட்டம்!

**யாழ்ப்பாணம், ஏப். 27**

**சுழிபுரம் - காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தற்சமயம் இருக்கின்ற அதிபரை இடமாற்றம் செய்யவேண்டாமென வலியுறுத்தி பாடசாலையின் முன்பாக பெற்றோரும் நலன்விரும்பிகளும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இந்த விடயம் தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:-

கடந்த 35 வருட காலமாக எங்களுடைய இந்தப் பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைவது அரிதிலும் அரிதாகவே இருந்தது. ஆனால், இந்த அதிபர் பொறுப்பேற்ற பின்னர் புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடையத் தொடங்கியுள்ளனர்.

அத்துடன், ஆறாம் தரத்துக்காக வேறு பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைப்பதற்குச் சென்றால் இப்போது எமது மாணவர்களை இணைப்பதற்கு அனைவரும் ஆர்வம்காட்டும் நிலைமையும் இந்த அதிபரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே இவ்வாறான மிகச்சிறந்த அடைவுகளை ஏற்படுத்தித் தந்த இந்த அதிபரை எமது பாடசாலையில் இருந்து இடமாற்றம் செய்ய வேண்டாம் -என்றனர்.

இந்தப் போராட்டம் தொடர்பில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ரவிச்சந்திரனைத் தொடர்புகொண்டு கேட்டபொழுது; புதிய அதிபர் தற்சமயம் இடமாற்றமாற்றலாகிச் சென்றாலும் சிரேஷ்ட ஆசிரியை ஒருவர் பாடசாலைக்குப் பொறுப்பாக இருப்பார் -என்றார்.

இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட நலன்விரும்பிகளும் பழைய மாணவர்களும் ஆளுநரின் உதவிச் செயலாளரின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டுசென்றனர். இதையடுத்து, பாடசாலைக்கு புதியதொரு அதிபர் நியமிக்கப்படும் வரையில் தற்போதிருக்கும் அதிபர் இடமாற்றப்பட மாட்டார் என்று உத்தரவாதம் வழங்கப்பட்டது. (ம-125)

# அதிபர்கள் இடமாற்றத்தில் உறுதியாக இருக்கின்றோம்

## வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் இப்படித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணத்தில் 47 அதிபர்கள் இடமாற்றம் செய்யப்படாமல் இருக்கின்றனர். ஆதலால் இடமாற்றம் வழங்குவதில் உறுதியாக இருக்கின்றோம் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ் வலயத்தில் ஆசிரியர் நியமனத்தின்போதும், அதிபர் நியமனத்தின்போதும் இதுவரை வெளி மாவட்டம் செல்லாத 47 அதிபர்கள் உள்ளனர். யாழ்ப்பாணத்தில் தீவகம் தவிர்ந்த யாழ்ப்பாணம் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய வலயங்களிலே குறித்த அதிபர்கள் கடமையாற்றுகின்றனர். இவ்வாறான நிலையில் தற்போது முதற்கட்டமாக 27 அதிபர்களுக்கு வெளி மாவட்டங்களுக்கு பணியிட மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் 27 பேரும் பணியிடமாற்றத்தை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளனர் என்று தெரியவருகின்றது. இவ்வாறான நிலையிலேயே வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் மேற்படி தெரிவித்துள்ளார். (ம-20)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளை சந்தித்தார் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்

யாழ்ப்பாணம், ஏப். 27

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கப் பிரதிநிதிகள், அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே சங்கை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். கொக்குவிலிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்புக்குப் பின்னர் சங்கச் செயலாளர் யோ.கனகரஞ்சினி தெரிவிக்கையில்; எமக்கு இலங்கையின் நீதிப் பொறிமுறையில் நம்பிக்கையில்லை. சர்வதேச நீதிப் பொறிமுறையே எமக்கு வேண்டும் என்று தூதுவரிடம் எடுத்துக் கூறினோம் -என்றார். (க-125)

# திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை தினம்


வவுனியா, ஏப். 27

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க பொன்விழா மண்டபத்தில் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள், பொது அமைப்பினர், சிறுவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-14-110)

# தந்தை செல்வாவுக்கு தாயகத்தில் அஞ்சலி





யாழ்ப்பாணம், ஏப். 27

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுநரான தந்தை செல்வாவின் 45ஆவது நினைவுதினம் தமிழர் தாயகத்தில் நேற்றுப் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில், ஓய்வுநிலை ஆயரும் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழுத் தலைவருமான கலாநிதி சு.ஜெபநேசனின் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**மட்டக்களப்பு**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுநரான தந்தை செல்வாவின் 45ஆவது நினைவு தினம் மட்டக்களப்பு தந்தை செல்வா நினைவு முற்றத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து தீபமேற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்புக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உட்பட தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-14-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண விவசாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தத் திட்டம்

## ஆளுநர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 27

வடக்கு மாகாணத்தில் இரண்டு வருடத்தில் விவசாயத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் தயார் செய்யப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு இலங்கையில் முதலீடு மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு வரவழைத்து முதலீடு மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு அரசாங்கம் 11 அம்ச கொள்கைத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. அதுமட்டுமல்லாது பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்கள், கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்கள், முதியவர்கள், சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் நிரந்தர வாழ்விடங்களை அற்றவர்கள் தொடர்பிலும் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அதேவேளை வடக்கில் எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்தைத் தடையின்றி வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. தீவகப் பகுதிகளின் தேவைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகின்றது -என்றார். (க-20)



## கௌதாரி முனையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணை அகற்றல்

கிளிநொச்சி, ஏப். 27

கிளிநொச்சி கௌதாரி முனையில் இலங்கை- சீன கூட்டு நிறுவனமான குயிலான் நிறுவனத்தினால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணை அகற்றப்பட்டது.

குறித்த கடலட்டைப் பண்ணைக்கு பிரதேச மக்களும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்த நிலையிலேயே அந்தப் பண்ணை தற்போது திடீரென அகற்றப்பட்டுள்ளது. (ய-113)

## கஞ்சா விற்பனை: பெண் கைதானார்

யாழ்ப்பாணம் ஏப். 27

அரியாலை பகுதியிலுள்ள வீடு ஒன்றில் வைத்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குடும்பப் பெண் ஒருவர் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது விற்பனைக்காக வைத்திருந்த 2 கிலோ கஞ்சாப் பொதியினை பொலிஸார் மீட்டதுடன் குறித்த பெண்ணும் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பெண் அரியாலைப் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் போதைப் பொருள் விற்பனையில் பெண்கள் ஈடுபடுவது அதிகரித்த நிலையில் கடந்த 6 மாத காலப் பகுதிகளில் யாழில் 8 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-20)




# நிலஅபகரிப்பு முயற்சியால் பொன்னாலையில் பதற்றம்

## தனியார் காணியை கடற்படைக்கு தாரைவார்க்கும் செயற்பாடு மும்முரம்

**யாழ்ப்பாணம், ஏப். 27**

**சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை தெற்குப் பகுதியில் ஜே/170 கிராம அலுவலர் பிரிவில் உள்ள தனியார் ஒருவரது காணியை, கடற்படையினரின் தேவைக்காக அபகரிக்க நேற்று நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.**



முத்துக்குமாரசாமி விநாசித்தம்பி என்பவரது எட்டுப் பரப்புக் காணியில் கடற்படையினர் முகாமொன்றை அமைத்துள்ளனர்.

இந்தக் காணியை நிரந்தரமாகக் கையகப்படுத்துவதற்காகவே நேற்று நில அளவை செய்வதற்கு நிலஅளவைத் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்குக் காணி உரிமையாளரும், மக்கள் பிரதிநிதிகளும், பொதுமக்களும் எதிர்ப்பைப் பதிவுசெய்தனர். இதையடுத்துக் காணி அளவீடு கைவிடப்பட்டது.

காணி அளவீட்டுக்குக் கண்டனம் தெரிவித்து காணி உரிமையாளரால் நில அளவைத் திணைக்களத்துக்குக் கடிதமொன்றும் வழங்கப்பட்டது.

இந்த நில அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரட்னம் சுகாஷ், வலி வடக்கு மீள் குடியேற்ற தலைவர் சஜீவன், வலி மேற்கு பிரதேச சபை தவிசாளர் நடனேந்திரன், காணி உரிமையாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ம-125)



# கண்ணிவெடி அகற்றும் பகுதியை பார்வையிட்டார் அமெரிக்கத் தூதுவர்

கிளிநொச்சி, ஏப். 27

முகமாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பகுதியை நேற்று நேரில் பார்வையிட்டார் அமெரிக்க தூதுவர் ஜூலி சங்.

அமெரிக்க கொடையாளர்களின் நிதியுதவியில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை தூதுவர் பார்வையிட்டதுடன், கள ஆய்வை மேற்கொண்டு பணியாளர்களுடன் கலந்துரையாடினார். அத்துடன் குறித்த பகுதியில் மீட்கப்பட்ட வெடிபொருள்களையும் பார்வையிட்டார். மேலும் கண்ணிவெடி அகற்றும் பணியை முன்னெடுத்து வரும் ஊழியர்களை தூதுவர் பாராட்டியதுடன் தொடர்ந்தும் பணிகளை முன்னெடுக்குமாறும் தெரிவித்தார். (ம-14-113)

## பெண்ணின் சங்கிலி அறுப்பு

மன்னார் இலங்கை வங்கிக்கு அருகாமையில் பெண்ணொருவரிடமிருந்து சங்கிலியொன்று நேற்றுமுன்தினம் அறுக்கப்பட்டுள்ளது. உப்புக்குளம் பகுதியை நோக்கிப் பயணித்த பெண்ணின் பின்னால் வந்த நபர் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார். இது தொடர்பில் பெண் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்தார். முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்துக் கட்டண உயர்வால் பயணிகளின் வருகை வீழ்ச்சி!

## தனியார் பேருந்துச் சங்கம் கவலை

கொழும்பு, ஏப். 27

**பேருந்துகளை இயக்குவதற்கு போதியளவு டீசல் கிடைக்கின்ற போதிலும், பேருந்துக் கட்டண உயர்வால், கடந்த சில நாள்களாக பயணிகளின் வருகை குறைந்துள்ளது -என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் தலைவரான கெமுனு விஜேரத்ன தெரிவிக்கையில், எமக்கு டீசல் தட்டுப்பாடு இல்லை. நாட்டு நிலைமை காரணமாக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. தொடரும் எதிர்ப்புக்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் காரணமாக புத்தாண்டு விடுமுறைக்காக கொழும்பில் இருந்து சென்ற கணிசமானோர் இன்னும் திரும்பவில்லை. இதனால் ஒரே நேரத்தில் வருவாய் இழப்புடன் செயற்பாட்டுச் செலவுகளும் கடுமையாக அதிகரித்துள்ளன -என்றார். (க-இ)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணம் திடற்புலம் நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்புச்சொற்பொழிவுகள் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி காலை 7 மணிக்கும் மறுநாள் இரண்டாம் திகதி முற்பகல் 11 மணிக்கும் ஆலய பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் முதலாம் திகதி 'ஆலய தரிசனம்' என்ற கருப்பொருளிலும் இரண்டாம் திகதி 'இறைவனின் அருள் சுரக்கும் இடம் ஆலயம்' என்ற கருப்பொருளிலும் இளஞ்சைவப்புலவர் ச.நவநீதன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (ம-ய)

## ஜயந்தி விழா

யாழ்ப்பாணம், ஏப். 27

ஸ்ரீலஸ்ரீ சிவகுரு முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் 114 ஆவது ஜயந்தி விழா நாளை காலை 9 மணிக்கு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. விழாவில் சிறப்புப் பூசைகளும் ஆராதனைகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-14)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஏப். 27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கோப்பாய் இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ பா.சோம சுந்தரக்குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும் நாளை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-14)




வவுனியா, ஏப். 27

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் புரட்சிகர மேதினம் இந்த முறை வவுனியாவில் நடைபெறவுள்ளது என்று கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார். அவர் அனுப்பிய ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

'இன்றைய நாசகாரப் பொருளாதாரக் கட்டமைப்பை எதிர்த்து அணிதிரள்வோம்' என்ற தொனிப்பொருளில் ஆர்ப்பாட்டப் பேரணியும் பொதுக்கூட்டமும் மேதினத்தில் இடம்பெறும்.

பேரணிக்குக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல் உட்பட கட்சியின் அனைத்து பிராந்திய செயலாளர்களும் தலைமை தாங்குவதோடு யாழ்ப்பாணம், வவுனியா, மாத்தளை, நுவரெலியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, கொழும்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், விவசாயிகள், அரச தனியார் துறை ஊழியர்கள், உழைக்கும் இளையோர் பெருமளவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே தேசிய ஜனநாயக சக்திகளை ஒன்றிணைக்கவும், தேசிய பொருளாதாரத்தைத் திட்டமிடவும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தவும் உழைக்கும் அனைத்து மக்களும் இந்த மேதினத்தில் அணிதிரள புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு விடுக்கின்றது -என்றுள்ளது. (ம-14)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை; வெட்டுப்புள்ளிகள் அடுத்த வாரம்

கொழும்பு, ஏப். 27

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், மே மாதம் முதல் வாரத்தில் வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கான பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என்று பாடசாலை விவகாரங்களுக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர் லலிதா எகொடவெல தெரிவித்துள்ளார். (க-இ)



## சுற்றுச்சூழலுக்கு நீதி கோரி யாழில் பெண் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

சுற்றுச்சூழலுக்கு நீதி வேண்டும் எனக் கோரி நேற்று முன்தினம் யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட உதவிப்பொலிஸ்மா அதிபர் காரியாலயம் முன்பு பெண்ணொருவர் கவனவீர்ப்பில் ஈடுபட்டார்.

'யாழ். மாநகரசபையின் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஏன் அதிகாரத்தை துஷ்பிரயோகப்படுத்தினார்' என்ற வாசகத்தை எழுதிய பதாகையைத் தாங்கியவாறு அவர் கனவீர்ப்பில் ஈடுபட்டார். (ம-14-20)

## நிர்வாகத் தெரிவு

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக மீண்டும் இ.அ.ஆனந்தராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் அண்மையில் பொதுச் சபைக் கூட்டம் நடைபெற்றது. இதன்போதே சங்கத்தின் தலைவராக இ.அ.ஆனந்தராசா மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். மேலும் சங்கத்தின் உப தலைவராக ப.கோடீஸ்வரநாதன், இயக்குநர் சபை உறுப்பினர்களாக இ.கந்தையா, க.கோடீஸ்வரன், க.விஜயகாந்தன், க.வக்சலா, பா.காஞ்ஜீவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-14-9)

## நீதிமன்றில் நுழைந்த பாம்பு

சாவகச்சேரி திறந்த நீதிமன்றில் நேற்றுமுன்தினம் பாம்பொன்று நுழைந்துள்ளது.

நீதிமன்றுக்கு வழக்குக்குச் சென்ற ஒருவர் நீதிவான் இருக்கைக்குப் பின்னால் உள்ள திரைமறைவினுள் பாம்பு இருப்பதைக் கண்டு பொலிஸாருக்குத் தெரிவித்தார். அதனையடுத்து பொலிஸாரால் பாம்பு அகற்றப்பட்டது. (ம-14-9)

## ஊடகவியலாளர் ரூபனுக்கு பொன்னாலையில் அஞ்சலி



யாழ்ப்பாணம், ஏப். 27

ஊடகவியலாளர் செல்வரத்தினம் ரூபனின் 12ஆவது ஆண்டு நினைவேந்தல் பொன்னாலையில் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது அவரின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் பொன்ராசா தலைமையில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது. (ம-14-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேவை ஒரு லீ குவான் யூ

ஆசியாவின் நெற் களஞ்சியம் என்றொரு நாடு முன்பிருந்தது. இரு பருவ மழைகளைச் சரியாகப் பயன்படுத்தி இருபோகம், முப்போகம் என்று உலகுக்கே ஓர் இலக்கணமாக விளங்கியது அந்த நாடு. இன்று அந்தத் தேசத்தின் கதையே வேறு. பாலைவன நாடுகளிடம் இருந்துகூட அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய பச்சாதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது அந்த 'நெற் களஞ்சியம்'. இறப்பின் நாள்களை எண்ணிக் கொண்டிருக்கும் ஒரு மூப்பாளன்போன்று இன்றிருக்கும் அந்த நாட்டின் பெயர் இலங்கை.

என்ன இல்லை இந்த நாட்டில்? உலகின் ஆகச் சிறந்த தற்சார்புப் பொருளாதாரத்தைக் கொண்டு தலைநிமிர்ந்து நிற்கவேண்டிய நாடு இது. சுற்றிக் கடலிருக்கின்றது. ஆனால், மீன்பிடிப்பது அத்துமீறிவரும் இந்தியர்கள்தான். அதனால் தகரத்தில் அடைக்கப்பட்ட பதனிட்ட மீனை தொன் கணக்கில் இறக்குமதி செய்கின்றோம். பசுமை போர்த்திய மலைநாடு இருக்கின்றது. ஆனால், தேயிலையின் உரிமம் முற்றிலும் தனியார் மயப்பட்ட நிறுவனங்களிடம் தான். வளமான நிலவளம் இருக்கின்றது, ஆனால், அரிசி மியான்மரில் இருந்து வருகின்றது. வானுயர்ந்த தென்னைகள் இருக்கின்றன, ஆனால் தேங்காய்கள் இந்தோனேசியாவில் இருந்தும், மாலைதீவில் இருந்தும் வருகின்றன. தேவையான அளவுக்கு சூரிய வெளிச்சம் கிடைக்கின்றது. ஆனால், புதுப்பிக்கப்பட்ட மின்திட்டத்துக்கு இன்னும் அத்திபாரம்கூட அவ்வளவு நேர்த்தியாக இடப்படவில்லை. இப்படியொரு அடிமட்ட – சாபக்கேட்டான – நிர்வாகம் இருந்தால் எந்த நாடுதான் இறவாதிருக்கும்?


இதன் விளைவாக, உலகில் பணவீக்கம் அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தில் பதிவாகியுள்ளது இலங்கை. அதிலும், தொடர்ந்து பணவீக்கம் ஏற்படுவதற்குச் சாதகமான அத்தனை முகாந்திரங்களும் இலங்கையில் வலுவாக இருக்கின்றன என்ற சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. சோகம் யாதெனில், ரஷ்யாவால் கடந்த இரண்டு மாதங்களாக சல்லடையாக்கப்பட்டுள்ள – சல்லடையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற உக்ரைனில்கூட இலங்கையைப் போன்று இவ்வளவு பாரதூரமான பணவீக்கம் ஏற்படவில்லை. 'உலகப் பயங்கரவாதிகள்' என்று எச்சரிக்கப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நிலைகொண்டிருந்த சிரியாகூட 42 வீதமான பணவீக்கத்துடன் எட்டாவது இடத்தில்தான் இருக்கின்றது. ஆனால் இலங்கை...? இதன் அர்த்தப்பாடுதான் என்ன?

பணவீக்கம் தொடர்பில் வெளியாகிய இந்தப் பட்டியலில் முதல் பத்து இடங்களில் உள்ள நாடுகள் ஏன் இந்த அவல நிலைக்கு வந்தன என்று கேட்டால், அதற்கு வறட்சியால் ஏற்பட்ட வறுமை, உள்நாட்டுப் போர் அல்லது ஆயுதக் குழுக்களின் மோதுகை, மற்றும் ஊழல் என்பனவற்றை முதன்மைக் காரணங்களாகக் குறிப்பிடலாம். இதில் இலங்கைக்குச் சாவுமணி அடித்துக் கொண்டிருப்பவை ஊழலும் வினைத்திறனற்ற நிர்வாகமுமேதான்.

உண்மையில் இந்தப் பேராபத்தான நிலையில் இருந்து இலங்கைக்கு மீட்சி கிட்டுவதற்கான விடிவெள்ளி கண்களுக்குப் புலப்படும் தொலைவில் இல்லை. சிங்கப்பூரைச் செதுக்கிய லீ குவான் யூ போன்ற கொள்கைப்பிடிப்பும், நாட்டின் மீதான நேசமும், அர்ப்பணிப்பும் கொண்ட ஒரு பெருந்தலைவரால்தான் இலங்கைக்கு மீட்சியென்பது இனிச் சாத்தியம். ஆனால், அப்படியொரு தலைவர் 'இனவாதம்', 'மதவாதம்' என்ற சித்தாந்தங்களில் இருந்து ஒருபோதும் பிறப்பெடுப்பதில்லை.

## நாளொரு நல்வார்த்தை

"உங்களைத் தவிர வேறு எதுவும் உங்களுக்கு அமைதியைத் தரமுடியாது. மற்றவரை அறிந்தவன் புத்திசாலி; தன்னைத் தான் அறிந்தவன் ஞானி" -லா ஓட்ஸ்




# பிரபாகரன் இருந்திருந்தால் கொழும்பு கொந்தளிக்காது

## ஹர்சன எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஏப். 27**

**விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால், கொழும்பு இன்று கொந்தளித்திருக்காது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு மாகாநாயக்கர்கள் உட்பட அனைவரும் கோரிக்கை விடுக்கின்றனர். ஆனால் ஜனாதிபதியும், பிரதமரும் காது கேளாதது போலவும், கண் தெரியாதது போலவும் நடந்து கொள்கின்றனர். வீதிகளில் நிலையான வீதித் தடைகளைப் பொருத்தியுள்ளனர். சில வீதித்தடைகளை முட்கம்பிகள் கொண்டு உருவாக்கியுள்ளனர். முட்கம்பி ஏதேனும் கண்களில் பட்டிருந்தால் காலம் முழுவதும் பார்வையற்றவராகும் நிலை ஏற்படலாம்.

இப்படியான கொடூரமான சம்பவங்கள் தொடர்பில் மனித உரிமைகள் தொடர்பான இயக்கங்கள் தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தன. எனினும் கருத்துக்களை தெரிவிப்பது மாத்திரம் போதாது. இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகின்றோம். இந்த நாட்டின் தலைவராக பிரபாகரன் இருந்திருந்தால், அவர் கூட இப்படிச் செய்திருப்பார் என்று நான் நினைக்கவில்லை. சிலர் தெரிவித்தார்கள் ஹிட்லர் போன்ற ஒரு தலைவர் தேவையென. அப்படியாயின் ஹிட்லர் போன்ற தலைவராகவா முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன? - என்றார். (க-இ)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 10 பேர் விடுவிப்பு

மட்டக்களப்பு, ஏப். 27

மட்டக்களப்பு கிரான் கடற்கரையில் கடந்த வருடம் முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவு கூர்ந்தமை தொடர்பில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 10 பேரும், சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றால் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு முன்னேற்றக்கழக தலைவர் வி.லவக்குமார் தலைமையில் கடந்த மே 18ஆம் திகதி, முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் கிரான் கடற்கரையில் இடம்பெற்றது. இதன்போது கைதுசெய்யப்பட்ட 10 பேரே வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். (க-இ)

நாளை 28.04.2022 வியாழக்கிழமை சித்திரை 15

சுபநேரம் : 07.28 - 08.58
ராகுகாலம்: 01.28 - 02.58

பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் அதிபர் தேர்தலில்

# மீண்டும் அதிபராகிறார் இம்மானுவல் மக்ரோன்

**பரிஸ், ஏப்.27**

**பிரான்ஸில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று தொடர்ந்து இரண்டாவது முறையாக இம்மானுவல் மக்ரோன் ஜனாதிபதியாகத் தேர்வாகியுள்ளார்.**



பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. பிரான்ஸ் ஜனாதிபதி பதவி வகித்து வரும் இம்மானுவல் மக்ரோனின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து 12ஆவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கு 2 சுற்றுத் தேர்தல் கடந்த 10ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

அதில், தற்போதைய ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் மற்றும் மரீன் லெபென் உள்ளிட்ட 12 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்தத் தேர்தலில் மக்ரோன் 27.8 சதவீத வாக்குகளும், மரீன் லெபென் 23.2 சதவீத வாக்குகளும் பெற்றனர்.

அந்த நாட்டு சட்டப்படி ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்படுபவர் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் பெற்றிருக்கவேண்டும்.

ஆனால், நடைபெற்ற வாக்குப் பதிவில் யாருக்கும் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் கிடைக்காத நிலையில், முதல் இரு இடங்களைப் பிடித்த மக்ரோனுக்கும், தீவிர வலதுசாரி கொள்கையைக் கொண்ட மரீன் லெபென்னுக்கும் இடையே இறுதிக்கட்ட வாக்குப் பதிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் மக்ரோன் 58 சதவீத வாக்குகளைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாக வாகை சூடி உள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட மரீன் லெபென் 42 சதவீத வாக்குகள் பெற்றார்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற இம்மானுவல் மக்ரோனுக்கு பல்வேறு நாட்டுத் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். (ச-இ)

# அமெரிக்காவை மீண்டும் தாக்க திட்டமிட்டிருந்தார் பின்லேடன்!

## அறிக்கையில் அதிர்ச்சி

வொஷிங்டன், ஏப். 27

அமெரிக்காவை மீண்டும் தாக்குவதற்கு பின்லேடன் திட்டமிட்டிருந்தார் என்ற தகவல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

பின்லேடன் அமெரிக்காவின் சீல் படைகளால் கொல்லப்பட்ட பின்னர் பல்லாயிரக் கணக்கான ஆவணங்களை அமெரிக்கா கையகப்படுத்தியது. அவை பகுப்பாய்வு செய்யப்பட்டு அந்தத் தகவல்கள் தற்போது வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே பின்லேடன் அமெரிக்காவை மீண்டும் தாக்குவதற்குத் திட்டமிட்ட தகவல்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி அமெரிக்காவின் ரயில் தண்டவாளங்களில் ஒன்றை வெட்டியெடுத்து ரயிலைத் தடம்புரள வைத்து நூற்றுக்கணக்கானவர்களைக் கொல்வதற்கு பில்லேடன் திட்டமிட்டார்என்று அவருடைய கடிதமொன்றை மேற்கோள்காட்டி தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

# ஈரான் - சவூதி இடையே மீண்டும் பேச்சுத் தீவிரம்!



ரியாத், ஏப். 27

வளைகுடாவில் பகையாளி நாடுகளாக உள்ள சவூதிக்கும் ஈரானுக்கும் இடையே அண்மையில் நேரடிப் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து சர்வதேச ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளில், 'ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஈரானும் சவூதி அரேபியாவும் ஐந்தாவது சுற்று நேரடிப் பேச்சை நடத்தியுள்ளன. இந்தப் பேச்சு எந்தத் திகதியில் நடத்தப்பட்டது என்ற விவரம் தெரியவில்லை. ஆனால், பேச்சு நடத்தப்பட்டதை ரியாத் (சவூதி), தெஹ்ரோன் (ஈரான்) உறுதிப்படுத்தியுள்ளன.' - என்றுள்ளது. (ம)

# எண்ணெய் ஆலையில் தீ! 100க்கும் மேற்பட்டோர் பலி



நைஜர், ஏப். 27

நைஜீரியாவில் சட்டவிரோதமாக செயற்பட்டு வந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவில் வறுமை, வேலையின்மை போன்ற காரணங்களால் சட்டவிரோதமாக பல்வேறு இடங்களில் எண்ணெய்ச் சுரங்கங்கள், ஆலைகள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. இங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதில்லை. அவ்வாறு செயற்பட்டுவந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையொன்றில் ஏற்பட்ட வெடி விபத்திலேயே சுமார் 100 பேர் உயிரிழந்துள்ளனர். (ம)

# பில் - மஸ்க் பனிப்போர்



டெஸ்லா நிறுவுநர் எலான் மஸ்க் தனது ருவிற்றர் பக்கத்தில் மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸை உருவக்கேலி செய்வது போன்ற பதிவை வெளியிட்டுள்ளார். இந்தப் பதிவு தற்போது சமூகவலைத்தளத்தில் ட்ரெண்டாகி வருகின்றது.

எலான் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில், ஒரு பக்கத்தில் மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸும், மற்றொருபுறம் தொப்பையுடன் இருக்கும் அப்பிள் எமோஜி ஒன்றையும் இணைத்து வெளியிட்டுள்ளார். இதற்கு நெட்டிசன்கள் பலரும் எதிர்ப்புக் கருத்துக்களையே வெளியிட்டுள்ளனர். இருவருக்கும் இடையிலான பனிப்போருக்கு சரியான காரணங்கள் தெரியாது நெட்டிசன்கள் குழப்பமடைந்துள்ளனர். ஒருசிலர் பில்கேட்ஸ், மைக்ரோசொப்ட் ஊழியர் ஒருவருடன் நெருக்கமாக இருந்த விவகாரத்தில் அவரது மனைவி மெலிண்டா கேட்ஸ் விவாகரத்துப் பெற்றதைக் குறிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

வேறு சிலர் மைக்ரோசொப்ட் நிறுவனம், டெஸ்லா பங்கு மதிப்பை அரை பில்லியன் மதிப்பிலானதாக குறைக்க முயற்சித்தது என எழுந்த குற்றச்சாட்டுக்கு பதிலடி கொடுக்கவே மஸ்க் இவ்வாறு பதிவு செய்துள்ளார் எனவும் பதிவிட்டு வருகின்றனர். (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய விடயங்களை கற்றுக் கொள்வீர்கள். ஆரோக்கியம் சீராக இருக்கும். வேலையில் அதிக கவனம் செலுத்துவீர்கள். உடல்நலக் குறைவு முழுமையாக சரியாகும்.

**இடபம்:** நீங்கள் மதிக்கும் நபர் ஒருவர் உங்களைப் பாராட்டுவார். சுபச் செலவு ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மனதில் உற்சாகம் பிறக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தின் சூழ்நிலை அறிந்து செயற்படுவீர்கள். உங்களின் முயற்சியால் நன்மை கிடைக்கும். நிதிநிலை கூடும். மேலதிகாரி பணியிடத்தில் உங்களைப் பாராட்டிப் பேசுவார்.

**கடகம்:** பேசும் போது மிகவும் கவனமாயிருங்கள். நட்பு வட்டம் விரியும். மற்றவர்களுக்காக அனுசரித்து செல்வீர்கள். பிறரை மகிழ்ச்சிப்படுத்துவீர்கள். அழகும், அறிவும் கூடும்.

**சிம்மம்:** தள்ளிப்போன பயணத்தைத் தொடர்வது பற்றி யோசிப்பீர்கள். சுறுசுறுப்புடன் செயல்பட்டு தேங்கியிருந்த பணிகளை முடிப்பீர்கள். குடும்பத்துக்குச் செலவு செய்வீர்கள்.

**கன்னி:** வியப்புக்குரிய செயல்செய்து அனைவராலும் பாராட்டப்பெறுவீர்கள். கல்வியில் முன்னேற்றம் கூடும். எடுத்த [illegible]

**துலாம்:** புதிய விடயங்களை மற்றவர்களுக்கு கற்றுத்தருவீர்கள். நேற்றைய பிரச்சினையில் இருந்து மீளுவதற்கு அமைதியை கையாள்வீர்கள். சகோதரர்கள் நன்மை செய்வர்.

**விருச்சிகம்:** வாகனப் பழுதை சீர் செய்வீர்கள். இன்று சுறுசுறுப்பான நாள். பள்ளி மாணவர்களுக்கு உதவுவீர்கள். நட்பால் நன்மை ஏற்படும். முயற்சியில் வெற்றி பெற விவேகத்துடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** வாழ்வில் நல்ல திருப்பத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று நிகழும். பிறருடன் தேவையற்ற கருத்து வேறுபாடு வேண்டாம் குடும்பத்தில் நீண்ட நாளாக இருந்து வந்த கவலை நீங்கும்.

**மகரம்:** சுபச்செலவால் குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தேவையற்ற பயம் வேண்டாம். பணியில் கவனம் தேவை. பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்துவீர்கள். நிதி நிலை மேம்படும்.

**கும்பம்:** பிறரின் பாராட்டை நம்பி வியப்படைய வேண்டாம். எந்த செயலிலும் நிதானத்தை கடைப்பிடிப்பதால் முன்னேற்றம் கூடும் அக்கம்பக்கத்தினரிடம் நல்ல பெயரை வாங்குவீர்கள்.

**மீனம்:** சமீபத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் மனதில் இருந்து அகலும் நாள். உங்களுக்கென்று ஒரு ரசிகர் கூட்டம் உருவாகும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 05 . 1980



மறைவு
26 . 04 . 2022

## பாலசுப்பிரமணியம் சிவகுமார் (சிவா)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சிவகுமார் அவர்கள் நேற்று (26.04.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் பத்மசோதி தம்பதியரின் அன்பு மகனும், பத்மநாதன் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், றமோனாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கதிரவேலய்யா மற்றும் அழகம்மா தம்பதியரின் பெறாமகனும், சிவசக்தி, சிவதர்ஷினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குலேந்திரனின் மைத்துனரும், பாலவன், திவ்யா, சஷ்வந் ஆகியோரின் அன்பு மாமனாரும், யசோதா, வினோதா, நீதா ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2022) புதன்கிழமை பிற்பகல் 04.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

077 721 8456 (CS 19516) (4/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
25 . 02 . 1946



இறப்பு
26 . 04 . 2022

## திருமதி ஞானப்பிரகாசம் திலகவதி

ஏழாலை மேற்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் திலகவதி அவர்கள் நேற்று (26.04.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் ஞானப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும், தியாகராசா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், சிவப்பிரகாசம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் கனகசபை, காலஞ்சென்றவர்களான வட்சலாதேவி, துரைசிங்கம் மற்றும் இந்திராணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சுபாசினி மற்றும் காஞ்சனா, குமரரூபன், ஜெசிந்தினி (ஜேர்மனி), குமாரதாஸ், சிந்துஜா ஆகியோரின் அன்புத் தாயும், கோணேஸ்வரன், தயாளினி, கிரிதரன், குணவதனி, கஜபரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிமன்யு, சங்கீர்த்தனா, சஹானா, லோஷிகா, ஜிதுசனா, சானுஜா, கேசிகா, அச்சுதன், ரிஷானிகா, சானுஜன், ரகிதன் ஹாருஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஹெங்காதேவி, சிவபாதம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2022) புதன்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 19515) 1/6



தென்மராட்சி பிரதேசங்களுக்கு உட்பட்ட பதிவு செய்யப்படட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருட கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மோகனதாஸ் அணி சம்பியனானது. அந்த அணி இறுதியாட்டத்தில் மட்டுவில் ஐங்கரன் அணியை 2:0 என்ற செற் கணக்கில் வீழ்த்தியது. (ம-9)



தென்மராட்சி பிரதேசங்களுக்கு உட்பட்ட பதிவு செய்யப்படட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருட கரப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் நாவற்குழி காந்தி அணி சம்பியனானது. அந்த அணி இறுதியாட்டத்தில் சாவகச்சேரி லிகோரியார் அணியை 2:1 என்ற செற் கணக்கில் வீழ்த்தியது. (ம-9)




மன்னார் மெசிடோ நிறுவனத்தால், யாழ். தீவகப் பகுதிகளில் பொருண்மியம் நலிவடைந்த மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட தெரிவுசெய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கு 3 ஆயிரத்து 350 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ம-213)



கொடிகாமம்- இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் புலமைப் பரீட்சை சித்தியாளர்கள் மற்றும் க.பொ.த.சாதாரண தர சித்தியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது சித்தியடைந்த தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு வித்தியாலயத்தின் பழைய மாணவர்களின் அன்பளிப்பில் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. (யு-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் கவிழும் பிரேரணை வெல்லும்

## சரத் பொன்சேகா நம்பிக்கை



**கொழும்பு, ஏப். 27**

**ராஜபக்ச அரசாங்கம் ஆடிய ஆட்டங்கள் அடங்கப் போகின்றன. இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எமது பிரேரணை வெல்லும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளது. எதிரணியில் உள்ளவர்களும், அரசாங்கத்திலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படுபவர்களும் மற்றும் அரசாங்கத்துக்குள் இருக்கும் அதிருப்தியாளர்களும் என 113க்கும் மேற்பட்டோர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கத் தயாராகவுள்ளனர். எனவே, இந்த அரசாங்கம் உடனடியாக கௌரவமாகப் பதவிவிலகவேண்டும். இல்லையேல் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊடாக இந்த அரசாங்கத்தை விரட்டுவோம் - என்றார். (க-22)

# இரு வாரங்களுக்கு ஒருமுறை மருந்துகளின் விலை திருத்தம்



கொழும்பு, ஏப். 27

இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை மருந்துகளின் விலையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

மருந்துகளின் விலையை அதிகரிக்கவேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு ஒரு போதும் இணங்குவதில்லை. டொலரொன்றின் பெறுமதிக்கு நிகராக விலையைத் திருத்தியமைத்து, நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளைத் தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை தற்போது 40 முதல் 60 வீதமான மருந்துகளின் விலை வர்த்தமானி ஊடாக கட்டுப்படுத்தப்படுகின்றது என்று ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் தலைவர் மருத்துவர் ரசித விஜேவன்த தெரிவித்துள்ளார். (க-இ)

# டொலரை முதலிட்டால் வதிவிட நுழைவிசைவு!

கொழும்பு, ஏப். 27

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நீண்டகால வதிவிட நுழைவிசைவு வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைவாக கூட்டு ஆதனங்களின் பெறுமதி குறைந்தபட்சம் 75 ஆயிரம் அமெரிக்க டொலராக அல்லது அதற்கு மேலதிகமாக முதலீடு செய்கின்ற வெளிநாட்டவர்களுக்கு மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளின் இயக்குநர்களுக்கு, அவர்களுடைய துணைவருக்கும், தங்கி வாழ்பவர்களுக்கும் அவர்கள் முதலிடுகின்ற அமெரிக்க டொலரின் அளவுக்கமைய, 5 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான நீண்டகால வதிவிட நுழைவிசைவு வழங்கப்படும்.

இலங்கை மத்திய வங்கியால் அங்கீகாரமளிக்கப்பட்ட வணிக வங்கியொன்றில் குறைந்தது 1 லட்சம் அமெரிக்க டொலரை வைப்பிலிடும் வெளிநாட்டவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கான வதிவிட நுழைவிசைவு வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (க-இ)

# கனியவளங்கள் தொடர்பான தேசியக் கொள்கை தாமதம்

## கோப் குழு அவதானம்

கொழும்பு, ஏப். 27

இலங்கையின் கனியவளங்கள் தொடர்பான, தேசியக் கொள்கை வகுப்பதில் கால தாமதம் தொடர்பில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) கவனம் செலுத்தியது.

புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் குறித்த பணியகத்தின் தற்போதைய செயற்றிறன் தொடர்பில் ஆராயும் கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

கனியவளங்கள் தொடர்பில் தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கான அனுமதி 2017ஆம் ஆண்டு அமைச்சரவையால் வழங்கப்பட்டுள்ளபோதும், இதுவரை தேசிய கொள்கை தயாரிக்கப்படாமை கவலைக்குரியது என்று கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் சுட்டிக்காட்டினார். அதற்கமைய கால அட்டவணையொன்றை அமைத்து, ஆறு மாதத்துக்குள் தேசிய கொள்கையைத் தயாரிக்க முடியுமா என்று கோப் குழுவின் தலைவர் கேள்வியெழுப்பினார். ஐந்து மாதங்களுக்குள் அதனைத் தயாரிக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் கனியவளங்கள் குறித்த வரைபடமொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. (க-இ)

# எரிபொருள் இறக்குமதி செய்ய விசேட துறையினருக்கு அனுமதி



கொழும்பு, ஏப். 27

நாட்டின் பொருளாதார செயன்முறையில் தெரிவு செய்யப்பட்ட விசேடமான துறைகள், தமக்குத் தேவையான எரிபொருள்களை தனித் தனியாக இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரமொன்றை வழங்கமுடியும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன்படி, பெற்றோலியப் பொருள்கள் இறக்குமதிக்காக முறையான வகையில் அடையாளம் காணப்படும் தரப்பினர்களுக்கு, அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில், பெற்றோலிய உற்பத்திப் பொருள்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டவரைவொன்றைத் தயாரிக்குமாறு ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (க-இ)

# எரிபொருள் சூத்திரம் விரைவில் திருத்தம்



கொழும்பு, ஏப். 27

எரிபொருள்களின் விலை விரைவில் திருத்தப்பட்டு, விலைச்சூத்திரம் அறிவிக்கப்படும் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

டொலருக்கு நிகரான எரிபொருள் விலையால் அரசாங்கம் தற்போது இழப்பை எதிர்நோக்குகின்றது. விலை அதிகரிக்கப்பட்டபோதிலும், நிதியமைச்சால் விதிக்கப்படும் வரிகள் நீங்கலாக 92 ஒக்ரேன் பெற்றோலால் 13.38 ரூபா இழப்பு ஏற்படுகின்றது. அத்துடன் 95 ஒக்ரேன் பெற்றோலால் 3.28 ரூபாவும், லங்கா ஓட்டோ டீசலால் 68.79 ரூபாவும், லங்கா சுப்பர் டீசலால் 67.46 ரூபாவும் மற்றும் மண்ணெண்ணெயால் 232.33 ரூபாவும் இழப்பு ஏற்படுகின்றது - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# ரஷ்யா, உக்ரைன் பயணிகளின் நுழைவிசைவுக் காலம் நீடிப்பு




கொழும்பு, ஏப். 27

ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளால், இலங்கையில் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகளின் நுழைவிசைவுக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

எவ்வித கட்டண அறவீடுகளின்றி அவர்களுக்கான நுழைவிசைவு அனுமதியை இரண்டு மாதங்களுக்கு நீடிப்பதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கடி நிலைமை நீடிப்பதால், இலங்கையில் தங்கியிருக்கும் ரஷ்யா மற்றும் உக்ரைன் நாட்டவர்கள் தொடர்ந்து தங்கியிருக்கக் கூடிய வகையில், சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நிலையங்கள் நாளை முற்றாக முடங்கும்!




கொழும்பு, ஏப். 27

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களும் நாளைமுடங்கும்என்று இலங்கை விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

வியாழனன்று நாடளாவிய ரீதியில் பெரும் முடக்கத்தை நடத்த தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன. அதனால் மரக்கறி கொள்வனவு நிறுத்தப்படும் என்று கொழும்பு மெனிங் சந்தை உள்ளிட்ட பல பொருளாதார நிலையங்கள் அறிவித்துள்ளன. எனவே மரக்கறி விவசாயிகள் மரக்கறிகளை சந்தைகளுக்கு அனுப்ப வேண்டாம் என்று சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (க-இ)

# கண்ணீர் அஞ்சலி

## கணித ஆசான் கந்தையா நல்லையா




ஆயிரம் பிறை கண்ட ஆசான்
உப்பில்லா ஊற்று ( கொம்மந்தறை) மண் பெற்றெடுத்த
உயர்தரக் கணிதப்புலி
வடமராட்சி மண்ணின் மூத்த தலைமுறைக்
கணித விற்பன்னர்
ஆயிரம் பிறை கண்ட ஆசான்
நிமிர்ந்த நன்நடை நேர்கொண்ட பார்வை
கொத்துக் கொத்தாக மாணவர்கள்
போராட்டக் களத்தை நோக்கிச் சென்ற எண்பதுகளில்
இன்னொரு தொகுதி வடமராட்சி மாணவர்களை
கட்டுக் கட்டாக பேராதனை , மொரட்டுவைப் பல்கலைக்கழகங்கள் நோக்கி
வடிகட்டி அனுப்பி வைத்த கணித யுத்த வீரன்
அட்சர கணிதம் விரல் நுனியில்
நாவில் நர்த்தனமாடும் நுண் கணிதம்
ஆள்கூற்றுக் கேத்திர கணிதத்தின் ஆணி வேர்
திரிகோண கணிதம் போல திரி மூர்த்திகளாய்
உம்மோடு வடமராட்சியில் கலக்கிய
மற்றிரு கணிதப் புலிகள் தில்லை, வெகடர்
இவர்களையும் நினைவு கூருகின்றோம்
நெல்லியடி சந்தியில் அந்தக்காலத்து
கருங்குதிரை மோட்டார் சைக்கிளில்
நீர் கம்பீரமாய்
சயன்ஸ் சென்டர், பீக்கன் நோக்கி...

பிறப்பு 01.02.1945 | இறப்பு 26.04.2022

உம் நினைவுகளோடு என்றும் வடமராட்சி கணித மாணவர்கள்

(CR 37603) (4/6)

# மரண அறிவித்தல்



## கந்தையா நல்லையா
## (கணித ஆசான்)

கொம்மந்தறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நல்லையா நேற்று (26.04.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், இரத்தினம் ஆறாத்தப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், செல்லப்பாக்கியம் அவர்களின் பாசமிகு கணவரும், கந்தையா அழகுதுரை (அமரர்), சின்னராசா பூபதி, பரராஜசிங்கம் பூமணி, அழகலிங்கம் தவமணி (ஜேர்மனி), கந்தையா தங்கராசா (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், நல்லையா பவானி (அமரர்), நல்லையா வசீகரன், நல்லையா சுபாகரன் (கனடா), நல்லையா பபாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும், வசீகரன் சுதேஸ்வரி, சுபாகரன் மஞ்சுளாதேவி (கனடா), பபாகரன் துவேனிகா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், வசீகரன் அன்பன், வசீகரன் மேனன், சுபாகரன் குணாளன் (கனடா), வசீகரன் அபித்தா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2022) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வெட்டித்துறை மயிலியதனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம்.

பிறப்பு 01.02.1945 | இறப்பு 26.04.2022


தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 09 . 1978



மறைவு 25 . 04 . 2022

## ஜெயராமகிருஸ்ணன் பாலமுரளி

யாழ்ப்பாணம் 19, வெங்கடேசன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராமகிருஸ்ணன் பாலமுரளி அவர்கள் நேற்றுமுன்தினம் (25.04.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயராமகிருஸ்ணன் தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், (அமரர்) ஐயம்பெருமாள், முத்துமாலை தம்பதியரின் அன்பு மருமகனும், சோபனாவின் அன்புக் கணவரும், கஜானி, ஸ்ரீகௌதம், கிருத்திகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், முரளிதரன், முகுந்தன், பிரியதர்ஷினி, ஜெயராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுரேஸ், கணேஸ், சத்தியா, இந்துஜா, காயத்திரி, டிமல்டா, கிருபாகரன், வனிக்ஷா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுதர்சன், அகல்யன், செறின்கைல், ஷரின், கிருஸ்ணநாயகி ஆகியோரின் பெரிய தந்தையும், லிதுர்ஷன், யதுஷ்னா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முரளிதரன்:- 076 856 2458
முகுந்தன்:- 077 717 8089
ஜெயராஜ்:- 077 222 9967

(CS 19506) (4/6)

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 11 . 1943



மறைவு 26 . 04 . 2022

## பொன்னையா பத்மநாதன்

உடுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பத்மநாதன் அவர்கள் நேற்று (26.04.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் யோகம்மா தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் (பேபி) அன்புக் கணவரும், அமரர் சண்முகநாதன், கமலநாதன், சந்திராதேவி, தில்லைநாதன் (அப்பன்), கமலாதேவி, இரத்தினேஸ்வரி (கிளி), பஞ்சநாதன் (பஞ்சன்), மதனேஸ்வரி, சத்தியநாதன், சிவகுருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஞானேஸ்வரி, அமரர் தவமலர், அமரர் சண்முகராஜா, முத்துமலர், மகேஸ்வரன், வைகுந்தவாசன், வரலட்சுமி (வரதா), வேலாயுதபிள்ளை, ஜெயராணி, வாகினி, இரத்தினேஸ்வரி (மணி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


யா/ உடுவில் மகளிர் கல்லூரி மேற்கு வீதி,
உடுவில் வடக்கு, சுன்னாகம்.
077 274 3860

(CS 19509) (4/6)

தகவல்
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 28.03.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்



மண்ணில் 09.06.1948

விண்ணில் 28.03.2022

அமரர்

## சண்முகநாதன் சிவராஜா [சிவதாஸ்]

[முன்னாள் கட்டட திணைக்கள உத்தியோகத்தர்]

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (28.04.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில்** நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச்செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலையத்தளம், துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும், அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குறிப்பு:- இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

செட்டித்தெரு நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(CS 19507) (4/6)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### Dr. அப்புத்துரை யோகராஜா (MBBS-Ceylon)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கு உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட வைத்தியகலாநிதி அப்புத்துரை யோகராஜா அவர்கள் நேற்று (26.04.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை பூமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லர் பொன்னு தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தேவமலரின் பாசமிகு கணவரும், கவிதா (CIMA Accountant, கொழும்பு), நிரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேமச்சந்திரன் (கொழும்பு- கட்டட பொறியியலாளர்), தேவப்பிரியா (ஆசிரியர், யாழ்/சிறி பார்வதி வித்தியாலயம், அரியாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவஹரிஸின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2022) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இல.22/9, சாஸ்திரியார் வீதி அரியாலையில் அமைந்திருக்கும் அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
077 358 3185 (CS 19512) (4/6)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 29.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் திருமதி**

### பஞ்சவர்ணம் விக்கினேஸ்வரன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (25.04.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (27.04.2022) புதன்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெற்று, ஆத்மசாந்திப் பிரார்த்தனை **இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில்** நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**அண்ணமார் கோவிலடி,**
**இணுவில் கிழக்கு.** (CS 19508) (4/6) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 - 04 - 1951



மறைவு 23 - 04 - 2022

### வயிரவன் செல்லன் (சின்னையா)

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட (ஓய்வுபெற்ற பனை தென்னை கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்தின் ஊழியர்) வயிரன் செல்லன் அவர்கள் கடந்த (23.04.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பசுபதி அவர்களின் அன்புக் கணவரும், தனுஷா அவர்களின் அன்புத் தந்தையும், குகாயேந்திரன் அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2022) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
(CS 19513 ) (4/6)


உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# தற்கொலைதாரிகளின் உடலுறுப்புகள் பகுப்பாய்வுக்காக அகழப்படுகின்றன!

அம்பாறை, ஏப். 27

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று, சாய்ந்தமருது பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்களை மீண்டும் தோண்டி எடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது. இந்த உத்தரவுக்கு அமைவாக, அம்பாறை பொதுமயானத்தில் அடக்கம் செய்யப்பட்ட சடலங்கள் இன்று தோண்டி எடுக்கப்படவுள்ளன.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி சாய்ந்தமருதுவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர். அவர்களில் கட்டுவாபிட்டிய தேவாலயத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்திய நபரின் மனைவியான புலஸ்தினி மகேந்திரன் என்றழைக்கப்படும் சாரா ஜாஸ்மினின் உடல் உறுப்புகள் பகுப்பாய்வில் கண்டறியப்படவில்லை. இதனால், அந்தச் சடலங்களை மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்த விசாரணை அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். அதனடிப்படையிலேயே கல்முனை நீதிவான் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டு, இந்த உத்தரவுக்கு அமைவாக இன்று சடலங்கள் தோண்டியெடுக்கப்படவுள்ளன. (க-இ)


## காணி / வீடு தேவை

யாழ்ப்பாணம் சுற்றாடலை அண்மித்த பகுதிகளில் வீடு தேவை. தரகர் தேவையில்லை.

**076 166 3620**

## காணி விற்பனைக்கு உண்டு

நாவற்குழி உணவு களஞ்சியத்திற்குப் பின்புறமாக 2.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (CS 19454) (4/6)

**077 365 3989, 077 825 2839**

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு: 27.07.1950
இறப்பு: 24.04.2022

எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றும்
**திருமதி தமயந்தி ரஜீவ்சங்கர்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**திரு.கனகரத்தினம் பாலச்சந்திரன்**
கடந்த (24.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(cs44347) (2.6)

**ஆசிரியர் நட்புறவுக் கழகம்**
**யா/ மானிப்பாய் இந்து கல்லூரி.**

## 7ம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு : 27 - 02 - 1943

உதிர்வு : 27 - 04 - 2015

**அமரர்**

### திரு.சுப்பிரமணியம் செந்தில்நாதன்.

( ஓய்வுபெற்ற தொழில்நுட்பக்கல்லூரி அதிபர், தர்மகர்த்தா - அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம், அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம். )

இப்பூவுலகில் இருந்து விண்ணுலகம் சென்ற
எங்களின் உறவே!! இந்த மண்ணுலகை விட்டு...
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்களை விட்டு மறைவதில்லை....

என்றும் நீங்கா நினைவுகளுடன்.....

- குடும்பத்தினர்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்

**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)**

- முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2020 (பழைய பாடத்திட்டம் - மீள் பரீட்சார்த்திகளுக்கானது)
- முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2020 (புதிய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளினை 21.05.2022 (சனிக்கிழமை) தொடக்கம் 05.06.2022 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணை, பரீட்சை அனுமதி அட்டையினை 13.05.2022 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 20.05.2022 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 – 222 – 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
26.04.2022 (cr.37893) (2.7)


# சுற்றுலாவியிடம் துர்நடத்தை இளைஞர்கள் மூவர் கைது!

கொழும்பு, ஏப். 27

இலங்கைக்கு சுற்றுலா வந்த வெளிநாட்டுப் பெண்ணுடன் செல்பி எடுப்பதுபோல் பாசாங்கு செய்து, அவரிடம் துர்நடத்தை யில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 3 இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை மற்றும் மெதவெலப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அயர்லாந்தைச் சேர்ந்த பெண், ஜேர்மன் நாட்டவருடன் கடந்த 6ஆம் திகதி கண்டிக்குச் சுற்றுலா சென்றுள்ளார். இதன்போது 3 இளைஞர்கள் அவருடன் செல்பி எடுக்க முண்டியடித்தனர். இளைஞர் ஒருவர் குறித்த பெண்ணிடம் துர்நடத்தையில் ஈடுபடும் காட்சி அவர்களது கமராவில் நேரலையாகப் பதிவாகியுள்ளது. அது இணையத்தளங்களிலும் வெளியிடப்பட்டது. இதனையடுத்து சமூக வலைத்தளங்களில் காரசாரமான விவாதம் எழுந்தது. இதையடுத்து கண்டி சுற்றுலாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 10 . 1934



இறப்பு 24 . 04 . 2022

## திருமதி ஆறுமுகம் புவனேஸ்வரி

யாழ். மானிப்பாயை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் புவனேஸ்வரி கடந்த 24.04.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - அன்னம்மா தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், செல்வராஜா, மகேஸ்வரி, திலகவதி, பரமேஸ்வரன் மற்றும் செல்வச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரதிபவானி, தேவராஜா, கதிர்காமசுவாமி, கலைவாணி, காயத்ரி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹர்ஜனா, தக்ஷாஜினி, சுதாஜினி, சுபோஜினி, கோகுலன், தர்சன், தர்சிகா, தீர்திகா, துலக்சி, கர்ஜினி, இலக்கியா, சாம்பவி, தேனுகா, செந்துஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வர்ஷன், வினுஷன், கவிஷன், கவித்தீஷா, அஷ்விந், அபினாஷ், சதுர்த்திகா, அஷ்விகா, சஹஸ்ரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவரர்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.04.2022) புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரையில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் 28.04.2022 வியாழக்கிழமை சொந்த ஊரான "புவனேஸ்வரி வாசா" இணுவில் வீதி, மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 11:00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

**இணுவில் வீதி, மானிப்பாய்.**

தொடர்புகளுக்கு :
செல்வராஜா - 077 732 8249
கதிர்காமசாமி - 077 730 8982
பரமேஸ்வரன் - + 33 683 701 206
செல்வச்சந்திரன் - + 151 4927 5595
கோகுலன் - 077 377 7158

தகவல்
குடும்பத்தினர்

(cs 44349)(2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 12 . 1957



மறைவு 25 . 04 . 2022

## சிவலிங்கநாதன் அருள்வேல்நாயகி

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கநாதன் அருள்வேல்நாயகி நேற்றுமுன்தினம் (25.04.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - தவமணி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிவலிங்கநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செந்தில்வேல்நாயகி மற்றும் சக்திவேல்நாயகி, ஞானவேல்நாயகி, வடிவேல் நாதன் (லண்டன்), பவளவேலாயுதன் (கனடா), மோகனவேல்நாயகி (லண்டன்), சோதிவேல்நாதன் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், தனபாலசிங்கம், காலஞ்சென்ற குலேந்திரன், அசோகன், ராணி, சுஜாதா, ஜெயரூபன், அனுஷா, ராசு, சோதி, பவளம், ராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் 90/1, கட்டுவன் வீதி, மல்லாகம், என்னும் முகவரியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

(cs 44349)(2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 04 . 1947



மறைவு 25 . 04 . 2022

## தியாகராசா வைரவநாதன்

(அம்பிகா ஸ்ரோர்ஸ், நாவலப்பிட்டி)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நாவலப்பிட்டி, சிங்கம் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா வைரவநாதன் நேற்றுமுன்தினம் (25.04.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஸ்ரீரங்கநாயகியின் பாசமிகு கணவரும், திரிபுரசுந்தரியின் பாசமிகு தந்தையும், சிவகுமாரின் (பிரதேசசெயலகம், தெல்லிப்பழை) அன்பு மாமனும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மகேஸ்வரி, பரமேஸ்வரி, அம்பிகை, தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவலிங்கம், காலஞ்சென்றவர்களான நாகையா, சகாதேவன், சரவணபவன், இராமநாதன் மற்றும் சிவகுருநாதன், காலஞ்சென்றவர்களான மோகராசா, பத்மநாதன் மற்றும் சரோஜினிதேவி, தனலட்சுமி, கனகசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் லட்சுமி, பரஞ்சோதிமலர், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற இராஜலிங்கம் மற்றும் சிவனேஸ்வரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிங்கம் வீதி,
உடுவில்.**

தகவல்
குடும்பத்தினர்
தொடர்பு: 077 385 3086
070 685 3086

(cs 44348)(2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 10 . 1946



மறைவு 25 . 04 . 2022

## திரு. பேரம்பலம் சண்முகநாதன்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கொல்லவிளாங்குளம் வவுனிக்குளத்தினை வதிவிடமாகவும் தற்போது நல்லூரில் வசித்தவருமான திரு.பேரம்பலம் சண்முகநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (25.04.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், சசிகலா, சுசிகலா, சதீஸ்குமார், செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகதீஸ்வரன், யசோதரன், அனுஷாந்தினி, சுகந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜானன், கீர்த்தனா, அருண், பிரியா, பைரவி, ராகவி ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும், துஷிதா, துஷான், தேனுஷா, யாழவன் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் நாகேஸ்வரி காலஞ்சென்ற ஆனந்தன் மற்றும் வாமதேவன் (தேவன்), தட்சணாமூர்த்தி (தனம்),லிங்கேஸ்வரன் (லிங்கன்), கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நீலாம்பிகை, தற்பரானந்தம் மற்றும் கனகரத்தினம் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், புருஷோத்தமன், பராசக்தி விஸ்வலிங்கம் மற்றும் விஜயலட்சுமி, தமயந்தி, தமிழ்ச்செல்வி, புனிதசீலி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற நாகராசா மற்றும் சிவபாக்கியம் காலஞ்சென்ற சகுந்தலா மற்றும் நிர்மலா, கணேசலிங்கம் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.87, கொல்லவிளாங்குளம் வவுனிக்குளம் என்ற முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (27.04.2022) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் சிவபுரம் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு :
[illegible] - 077 548 6672
[illegible] - 0033 066 371 1783
சதீஸ்குமார் - 077 324 1012
செந்தூரன் - 077 791 4647

தகவல்
குடும்பத்தினர்

(cs 19501)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமபுரம் பொலிஸ்பிரிவில் கசிப்புடன் இருவர் கைது



கிளிநொச்சி, ஏப். 27

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் நேற்றுக்கைதுசெய்யப்பட்டனர்என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய வீதிச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது நெத்தலி ஆற்றுப் பகுதியிலிருந்துபுதுக்குடியிருப்புநோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளில் கசிப்பு கொண்டுசெல்லப்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 40 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. அத்துடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ம-14,113)

## பதவி...

அமைச்சரவையைக் கலைத்து, இடைக்கால ஆட்சி ஒன்றை அமைப்பதன் ஊடாக தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச காய்நகர்த்துகின்றார் என்றும், பெரும்பான்மையை நிலைநாட்டி ஆட்சியைத் தக்கவைக்கும் முயற்சிகளில் மஹிந்த ராஜபக்ச மற்றும் பஸில் கூட்டணி தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்றும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மைய நாள்களில் மஹிந்த ராஜபக்ச பதவி விலக வேண்டும் என்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிடும் கருத்துகளுக்குப் பின்னால் கோத்தாபய ராஜபக்சவின் காய்நகர்த்தல்கள் இருக்கலாம் என்று நம்பப்படும் நிலையில், நேற்று ஆளும் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ச திடீர் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். அதன் தொடர்ச்சியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவியில் இருந்து விலகக்கூடாது என்று மாகாண சபை உறுப்பினர்களின் ஒன்றியம் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

அங்கு உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ச, இந்த நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கையின் பின்னணியிலும் நான் காணப்படுவதை உறுதியாக நினைவில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். அத்துடன் அழுத்தங்களுக்கு அடிபணித்து ஒருபோதும் தான் பதவி விலகப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். இது கோத்தாபய ராஜபக்சவின் காய்நகர்த்தல்களுக்கு மஹிந்த தரப்பு எடுத்த எதிர்நடவடிக்கையாகவே அரசியல் வட்டாரங்களில் நோக்கப்படுகின்றது.

மறுபுறத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களிடையே இன்று சந்திப்பொன்று நடக்கவுள்ளது. இந்தச் சந்திப்பில் சில முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் செயற்பாடுகளுக்கு, தற்போது சுயாதீனமாகச் செயற்படுவோம் என்று அறிவித்துள்ள ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறைமுகப் பங்களிப்பை வழங்குகின்றனர் என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

அதேநேரம், எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்காக மக்கள் நேற்று நாட்டின் பல இடங்களில் வரிசைகளில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. வரிசைகளில் காத்திருந்த மக்கள் ஜனாதிபதியும், அரசாங்கமும் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினர். (அ-எ-இ)

## திடீர்...

இவரது இறப்புக்கு நாய் கடித்தமை காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த சபாரத்தினம் கனகலிங்கம் (வயது-50) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கூலி வேலை செய்துவரும் இவர் கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி வேலைக்குச் சென்றுவரும்போது வீதியில் நாய் கடித்துள்ளது. இவர் இரு நாள்கள் கழித்து 17ஆம் திகதி மருத்துவமனை சென்று ஊசி ஏற்றிக்கொண்டுள்ளார். ஆயினும் அவருக்கு ஏற்பூசி ஏற்றப்பட்டிருந்தது என்றும், விசர்நாய்க் கடி தடுப்பூசி ஏற்றப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் திடீர் சுகவீனமுற்ற அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆயினும் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்துள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னரே இறப்புக்கான சரியான காரணத்தைக் கூற முடியும் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. (எ-26)

## மின் கட்டணங்களும்...

கோளை முன்வைத்துள்ளது என்று தெரிவித்துள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, ஆயினும் அந்த அதிகரிப்பு உடனடியாக இடம்பெறாது என்று தெரிவித்துள்ளது. உரிய பரிசீலனையின் பின்னரே அது தொடர்பாக ஆராயப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது நடைமுறைப்படுத்தப்பட்டால் ஒரு பிரிவினருக்கான மின் கட்டணம் முந்நூறு முதல் நானூறு சதவீதம் வரை அதிகரிக்கப்படும் என சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கினாலும், மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இதுவரையில் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (எ-இ)

## நம்பிக்கையில்லாப்...

நிலைப்பாடு என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை நாங்கள் கட்டாயம் ஆதரிக்க வேண்டும். ஜனாதிபதி இருப்பதால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடையாது. ஆனால், அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்து அரசாங்கத்தை வெளியேற்றுவதாக இருந்தால் அதற்குப் பதிலாக யார் வரப் போகிறார்கள் என்ற கேள்வியுள்ளது. அதனால் என்ன நடக்கப்போகின்றது என்பதை பார்த்தே நடவடிக்கையில் இறங்க வேண்டும். நாட்டிலுள்ள ஸ்திரத்தன்மை இல்லாது போய்விட்டால் பொருளாதார ரீதியான மீள்கட்டுமானம் என்பது பாதிக்கப்படும்.

தமிழ்க் கூட்டமைப்பு கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் சலுகைகளைப் பெற்றிருந்தது. ஆனால் தமிழ் மக்களுக்கு இந்த சலுகைகள் கிடைக்கவில்லை. இவர்களை வெளியேற்றிவிட்டு யாரை நம்ப போகின்றோம் என்ற கேள்வி இருக்கிறது. ஆகவே அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடு.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானம் எடுக்கப்பட்டால் அவருக்கு எதிராக செயற்பட வேண்டும் என்பதே எனது கருத்து. ஜனாதிபதி என்பதில் அவர் செய்த பிழைகள் இருக்கின்றன. அதேபோல பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது செய்த பிழைகள் பல இருக்கின்றன. ஜனாதிபதி என்ற முறையில் அவர் செய்த பிழைகள் என்று எடுத்துப் பார்ப்போமானால் பதவிக்கு வந்தவுடன் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய வரிகளைக் குறைத்து தனது ஆதரவாளர்களுக்கு நன்மையை கொடுக்கும் வண்ணம் பெருவாரியான வருமானத்தை இல்லாமற் செய்திருந்தார்.

மக்களுடன் கலந்தாலோசிக்காது, நிபுணர்களுடன் கலந்து ஆலோசிக்காமல் உடனடியாக நடைமுறைப்படுத்திய உரத்தடை நெருக்கடியை ஏற்படுத்தியது. ஜனாதிபதி செய்த பலவிதமான நடவடிக்கைகள் நாட்டை சீரழிக்கும் வகையில் அமைந்திருந்தன. ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணையைக் கொண்டு வந்தால் அதை ஆதரிக்க வேண்டும். அவரது கையாலாகாத தனத்தாலேயே நாடு மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது - என்றார். (எ-26)

## அலரிமாளிகை...

னெடுக்கப்படுகின்றது.

"மைனா கோ கம" என்று பெயர் சூட்டித் தொடர்ச்சியாக அங்கு போராட்டம் முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்கள் பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ச விலக வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

"மைனா கோ கமவை" கலைப்பதற்காக பொலிஸார் கோட்டை நீதிமன்றில் நேற்றுமுன்தினம் மனுத் தாக்கல் செய்திருந்தபோதும், பொலிஸாரின் கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது. பஸிலை காகம்( கப்புடா) எனவும், மஹிந்தவை மைனா எனவும் சிங்கள மக்கள் அண்மைக்காலமாக அழைத்து வருவது குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## இயக்கச்சி...

(வயது-60) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண், இயக்கச்சியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தை நோக்கி வீதியைக் கடக்க முயன்றபோது, யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் பின்புறமாக மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் உடல் பளை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பான விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-113)

## கண்டியில்...

மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். இந்தப் பேரணி எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பை அடையவுள்ளது. அதன் தொடர்ச்சியாக சுதந்திரப் போராட்டம் என்ற தொனிப்பொருளில் மே முதலாம் திகதி 'நூற்றாண்டின் மே பேரணி' நடைபெறவுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. (அ-எ-இ)

## பெரும்பான்மை...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வகட்சி இடைக்கால அரசை ஏற்படுத்துவதற்கு தான் தயார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மகாநாயக்க தேரர்களுக்கு எழுதிய கடிதத்திலும் அவர் அந்த விடயத்தை எடுத்துரைத்திருந்தார். ஆட்சி மாற்றத்துக்கு அவர் தடையாக இருக்கவில்லை. அரச தலைவராக நம்பகத்தன்மையுடன் செயற்பட்டுவருகின்றார்.

நாடாளுமன்றத்தில் இணக்கப்பாடு இருந்தால், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தலாம். இதுபற்றி ஜனாதிபதி எனக்கும் தனிப்பட்ட ரீதியில் தெரியப்படுத்தியுள்ளார்.

பிரச்சினைக்கு அரசமைப்பு ரீதியில்தான் தீர்வு காணவேண்டும். இடைக்கால சர்வகட்சி அரசுக்கு ஜனாதிபதி ஏற்கனவே அழைப்பு விடுத்தார். எதிர்க்கட்சிகள் முன்வரவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருந்தால், ஆட்சி மாற்றத்துக்கு ஜனாதிபதி எதிராக இருக்கமாட்டார் - என்றார். (அ-எ-44)

## நிதியும்,...

சப்ரி நீதி அமைச்சராகப் பதவி வகித்தார். அதன்பின்னர் அமைச்சரவை கூட்டாகப் பதவி விலகிய பின்னர் நிதி அமைச்சுப் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது. தற்போது அவருக்கு நீதி அமைச்சுப் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## ஜெட் வேகத்தில்...

வாக அறிவிக்கப்பட்டுள்ளது.

5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் ஆயிரத்து 945 ரூபாவாகவும், 2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 910 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனைச் செலுத்த மற்றுமொரு கடன்!

## இலங்கைக்கு சீனா வலை

**கொழும்பு, ஏப். 27**

**நாட்டின் கடனைச் செலுத்துவதற்கு சீனா மேலும் ஒரு தொகை கடனை வழங்கவுள்ளது என்று வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா தெரிவித்துள்ளார்.**

கடன் மறுசீரமைப்பு விடயம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான இலங்கையின் முடிவால், இலங்கைக்கான 2.5 பில்லியன் டொலர் சீன உதவி தொடர்பான பேச்சு தாமதப்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென்ஹொங் தெரிவித்திருந்தார். அவருடைய இந்தக்கூற்று, "சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை நடத்திவரும் பேச்சு பாதிப்பை ஏற்படுத்துமா?" என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா மேலும் தெரிவித்ததாவது:-

சீனா உலக நாடுகளுக்கு கடன் வழங்கி வருகின்றது.

இலங்கையின் கோரிக்கைக்கு சீனா இணக்கம் வெளியிட்டால், ஏனைய நாடுகளது கோரிக்கைக்கும் இணக்கம் வெளியிடவேண்டிய நிலைமை ஏற்படும். பொருளாதார முகாமைத்துவத்துக்கு மேற்கொள்ளவேண்டிய சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

தற்போதைய பிரச்சினையிலிருந்து மீள்வதற்கு நிதி அமைச்சர் பல்வேறு தரப்பினரிடம் பேச்சை மேற்கொண்டு வருகின்றார். 4 தொடக்கம் 5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி நாட்டுக்கு அவசரமாகத் தேவைப்படுகின்றது -என்றார். (க-இ)

## ஜனநாயக ரீதியான போராடுவதற்கு அரச அலுவலர்களும் வரவேண்டும்

### இம்ரான் எம்.பி கோரிக்கை



அரசாங்கத்துக்கு எதிராக பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு, சகல அரச அலுவலர்களும் தமது ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்றூப் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாகவே நாட்டின் பொருளாதாரம் சின்னாபின்னமாகி யுள்ளது. மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். பாதிக்கப்பட்ட மக்கள் தமது எதிர்ப்புக்களை நாடுமுழுவதும் ஜனநாயக ரீதியில் தெரிவித்து வருகின்றனர்.

பொருளாதாரச் சீரழிவால், அரச உத்தியோகத்தர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தினமும் விலை உயர்கின்ற அளவுக்கு அவர்களது சம்பளம் உயரவில்லை. எனவே, பாதிக்கப்பட்டோர் என்ற வகையில் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்குத் தமது ஒத்துழைப்புக்களை வழங்க முன்வரவேண்டும். இது குறித்து தொழிற்சங்கங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றார். (க-இ)

## நிரந்தரமான அரசியல் தீர்வாலேயே நாட்டின் பிரச்சினைகள் தீரும்

### ஜனா எம்.பி. தெரிவிப்பு

ஜனாதிபதியோ, அரசாங்கமோ பதவி விலகுவதால், இந்த நாட்டின் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. தமிழ் மக்களுக்கான நியாயமான, நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு முன்வைக்கப் படாவிட்டால் இந்தநாடு மீண்டும் மீண்டும் அழிவுப் பாதைக்கே செல்லும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

காரைதீவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதல் எமது உரிமைகள் பறிக்கப்பட்டன. நாங்கள் இன்றும் உரிமைக்காகப் போராடுகின்றோம். இன்று காலிமுகத்திடலில் பெரும்பாலான சிங்கள இளைஞர்கள் போராடுகின்றனர். அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராகவும், விலையேற்றத்துக்கு எதிராகவும் போராடுகின்றனர்.

ஆனால் நாங்கள் எமது உரிமைகளுக்காகப் போராடுகின்றோம். ராஜபக்ச சகோதரர்கள் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரவில்லை. சர்வதேசத்தின் உதவியை நாடினார்கள். குறிப்பாக இந்தியாவின் உதவியை நாடினார்கள்.

இந்திய, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு தனி ஈழம் அமைவது வேண்டத்தகாத காரணத்தால் ராஜபக்ச சகோதரர்களுக்கு உதவி செய்தன.

அன்று இவர்களைக் கொண்டாடிய மக்கள் இன்று எதிர்க்கின்றனர். இவையெல்லாம் தமிழர்களை முள்ளிவாய்க்காலில் கொன்றொழித்த பாவம். இன்று இந்தியா இல்லாதுவிட்டால் ஒட்டுமொத்த நாடே மிகவும் மோசமான வறுமை நிலைக்குச் சென்றிருக்கும் - என்றார். (க-150)

## நகைக்கடையில் பெரும் திருட்டு

கொழும்பு, ஏப். 27

அநுராதபுரம், தலாவையிலுள்ள நகைக்கடை ஒன்றில் 2.6 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன.

நகைக் கடையின் பின்பக் கதவு வழியாகப் புகுந்த திருடர்கள் தங்கம், வெள்ளி மற்றும் இரத்தினக் கற்களைத் திருடியுள்ளனர். இரகசிய முகவர் ஒருவரைப் பயன்படுத்தி நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் இருவரை தலாவ பொலிஸார் கைது செய்துள்ளனர். (க-இ)

## கால்வாயில் வீழ்ந்த குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 27

வீடொன்றுக்கு முன்னால் உள்ள கால்வாயில் தவறி விழுந்து ஒரு வயதும் 8 மாதங்களுமேயான ஆண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் தம்புத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது. குழந்தையின் சடலம் தம்புத்தேகம மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. தம்புத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண்ணொருவர் படுகொலை

### ஏனைய இரு பெண்கள் மீதும் கண்மூடித்தனமான தாக்குதல்

கொழும்பு, ஏப். 27

வெலிவேரியா பகுதியைச் சேர்ந்த நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி தனது மனைவியைப் படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:-

வெலிவேரியா பகுதியைச் சேர்ந்த நபரொருவர் தனது மனைவி உட்பட மூன்று பெண்களைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி தானும் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்துள்ளார். இந்தத் தாக்குதலில் அவரின் மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கானவரின் சகோதரி மற்றும் நண்பி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர் பொலிஸ் பாதுகாப்பில் கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வெலிவேரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)


**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்கு அனுபவமுள்ள மேசன், கூலியாட்கள், தச்சுவேலை செய்வோர் தேவை. 077 777 0969

(CS 19510 (4/6)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் வயாவிளானில் 96 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 2 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு.

- வயாவிளான் மகா வித்தியாலயத்தில் இருந்து (பலாலி வீதி) 1km தூரம்.
- வயாவிளான் தபால் கந்தோர் அருகாமை (300m தூரம்)
- 14 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை ஐந்து இலட்சம்
- அச்சுவேலி-தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து 800m தூரம்

(CS 19484) (4/6)

074 043 6599, 074 043 6375


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.